## கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி

**முன்னிலை: திரு.த.பாஸ்கர், B.Com., B.L.**
**கூடுதல் சார்பு நீதிபதி, பொன்னேரி**

**2022-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**அசல் வழக்கு எண்.224/2017**

**CNR.No.TNTR100015792017**

தேவேந்திரன் ....... வாதி

.... எதிர் ...

1. பாப்பாத்தியம்மாள்
2. முத்தையப்பன் ..... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 16.12.2022 அன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.R.மகாராஜன், அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.T.குமார் மற்றும் நாகசுந்தரம், ஆகியோர் முன்னிலையாகியும், வழக்கின் ஆவணங்களை ஆராய்ந்து இருதரப்பு வாதங்களையும் கேட்ட பின்னர் இது நாள் வரை பரிசிலனையில் இருந்து வந்த வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்

### தீர்ப்புரை

இவ்வழக்கானது வாதியால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VII விதி 1-ன் படி பிரதிவாதிகளோ அல்லது அவரது ஆட்களோ, முகவர்களோ மற்றும் அவரைச் சார்ந்தவர்களோ வழக்குச் சொத்தில் அத்துமீறி நுழைவதிலிருந்தும் மற்றும் வாதியின் அமைதியான உடைமையில் குறுக்கிடுவதை தடுக்க நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், மேலும் சார்பதிவாளர் அலுவலகம், செங்குன்றத்தில் 27.08.2010 அன்று

ஆவணஎண்.1940/2010-ல் பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ரத்துப் பத்திரம் செல்லாது என்று அறிவிக்கக் கோரியும், மேலும் சார்பதிவாளர் அலுவலகம், செங்குன்றத்தில் 10.11.2010 அன்று 1-ம் பிரதிவாதியால் 2-ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எண்.9526/2010 செல்லாது என்று அறிவிக்கக் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கின் சுருக்கம்:**

வாதி அசல் வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருப்பதாகவும், வழக்குச் சொத்தானது திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், பெருங்காவூர் கிராமத்தில் அடங்கிய புன்செய் சர்வே எண்.210/3-ல் புதிய சர்வே எண்.210/3B-ல் அடங்கிய 0.26.0 ஏர்ஸ் அதாவது 0.65 சென்ட் வழக்குச் சொத்தானது திரு.கணேசன் என்பவருக்கு சொந்தமானது என்றும், அவரது மனைவி திருமதி.ரஞ்சிதம்மாள் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டதாகவும், அவருடைய ஒரே மகள் முதல் பிரதிவாதி பாப்பாத்தியம்மாள் என்றும், பட்டாஎண்.41 திரு.கணேசன் பெயரில் தாக்கலாகி வந்துள்ளது என்றும், 30.10.1995 அன்று அவர் தன்னுடைய மகளான முதல் பிரதிவாதி பெயரில் உயில் எழுதி வைத்ததாகவும், அவருடைய இறப்பிற்கு பிறகு முதல் பிரதிவாதி அதன் உரிமையாளராக வழக்குச் சொத்தை அனுபவித்து வந்தார் என்றும், மேற்படி சொத்தை 15.10.1999 அன்று டாக்டர்.சுனில் பி.சுரானா என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்ததாகவும், அவரது அதிகார முகவரிடமிருந்து முதல் பிரதிவாதி ரூ.74,800/- பெற்றுக் கொண்டு சாட்சிகள் முன்னிலையில் எழுதிக் கொடுத்தார் என்றும், மேற்கண்ட அதிகார

முகவரிடமிருந்து வாதி 20.09.2010 அன்று பதிவு செய்யப்பட்ட கிரையப் பத்திரத்தின் மூலம் தாவா சொத்தை வாங்கி அன்று முதல் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வந்தார் என்றும், பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவற்றை அவருடைய பெயரில் பெற்றதாகவும் கிஸ்து செலுத்தி வழக்குச் சொத்தை அனுபவித்து வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் முதல் பிரதிவாதியின் அதிகார முகவர் அவருடைய பெயரில் பதிவான அதிகார பத்திரத்தை சோழவரம் பேருந்து நிலையத்தில் பயணம் செய்த போது தவற விட்டதாகவும், அது குறித்து சோழவரம் காவல்நிலையத்தில் 03.09.2010 அன்று புகார் தெரிவித்ததாகவும், அதன்பேரில் 17.09.2010 அன்று காவல்துறை ஆவணம் தொலைந்ததற்கான சான்று வழங்கியதாகவும், மேலும் வழக்குச் சொத்திற்கான முழு கிரையத்தொகையும் பெற்றுக் கொண்ட முதல் பிரதிவாதி அதிகார முகவர் பெயரில் பதிவு செய்த பொதுஅதிகார பத்திரத்தை 15.10.1999 அன்று எந்தவித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்து விட்டதாகவும், அவ்வாறு ரத்து செய்ததற்கான விவரத்தை எழுத்துமூலமாகவோ, நேரடியாகவே அதிகார முகவருக்கு தெரிவிக்கவில்லை என்றும், மேலும் முதல் பிரதிவாதி 10.11.2010 அன்று இரண்டாம் பிரதிவாதி பெயரில் மொசடியாகஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்துள்ளதாகவும், சொத்தின் உரிமை மற்றும் அனுபவமின்றி இரண்டாம் பிரதிவாதி பட்டா மாற்றம் செய்ய மனு தாக்கல் செய்ததாகவும், அதன்பேரில் பலமுறை விசாரணைக்கு ஆஜராகியும், இரண்டாம் பிரதிவாதி விசாரணைக்கு வர தவறியதை அடுத்து 24.11.2017 அன்று அம்மனு நிராகரிக்கப்பட்டதாகவும், இறுதியாக வருவாய் துறையினர் நீதிமன்றத்தை அணுகி நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தியதன் பேரில்

இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**2. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம் :**

மனுவில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை பிரதிவாதிகள் மறுக்கிறார்கள். மனுவின் பத்தி எண் 3 மற்றும் 4-ல் கூறப்பட்டுள்ள சர்வே எண்.210/3, புதிய எண்.210/3 B அளவுள்ள 65 சென்ட் ஏக்கர் 1.36 சென்ட், வழக்குச்சொத்தானது பிரதிவாதிகளின் தந்தை திரு.கணேசன் என்பவருக்கு சொந்தமானது என்றும், மேலும் முதல் பிரதிவாதி சொத்தின் அனுபவத்திலும் உடைமையிலும் இருந்தது உண்மை தான் என்றும், ஆனால் முதல் பிரதிவாதி திரு.கணேசன் அவர்களின் ஒரே மகள் என்பது பொய்யானது என்றும், மேலும் மனுவின் பத்தி எண்.5-ல் குறிப்பிட்டுள்ளவை முற்றிலும் தவறானவை என்றும், முதல் பிரதிவாதி தனது பொது அதிகார முகவராக டாக்டர்.சுனில் பி.சுரானா அவர்களுக்கு ஆதரவாக 15.10.1999 அன்று ஆவண எண்.869/1999-ல் பொது அதிகார பத்திரத்தை நிறைவேற்றினார் என்றும், அதன்பின்னர் 27.08.2010 அன்று ஆவணஎண்.1940/2010-ல் சார்பதிவாளர் அலுவலகம், கும்மிடிப்பூண்டியில் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்தார் என்ற குற்றச்சாட்டு பொய்யானது என்றும், மேலும் முதல் பிரதிவாதி டாக்டர்.சுனில் பி.சுரானாவிடமிருந்து எந்தவொரு பணத்தையும் பெறவில்லை என்றும், முதல் பிரதிவாதியின் கணவர் திரு.ஆறுமுகம் மற்றும் அவரது சகோதரர் திரு.குருநாதன் மற்றும் திரு.கௌரிநாதன் ஆகியோர் டாக்டர்.சுனில் பி.சுரானாவின் உதவியுடன் அவரது கையொப்பத்தை தவறாக பயன்படுத்தி பொய்யான ஆவணங்களை தயாரித்ததாகவும், டாக்டர் சுனில் பி.சுரானாவின்

அலுவலகம் சார்பதிவாளர் அலுவலகம், செங்குன்றத்தில் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மனுவின் பத்தி எண்.6-ல் கூறப்பட்டுள்ள சங்கதிகளான வாதி வழக்குச்சொத்தை பொதுஅதிகார முகவரிடமிருந்து வாங்கினார் என்பது பொய்யானவை என்றும், டாக்டர் சுனில் பி.சுரானா பைனான்சியர் மட்டுமே விற்பனையாளர் அல்ல என்றும், பிரதிவாதிகள் விற்பனைப் பத்திரத்தை நிறைவேற்றியதை ஒப்புக் கொண்டனர் என்றும், பட்டா, சிட்டா, அடங்கல் மற்றும் கிஸ்து வாதியின் பெயரில் மாற்றப்பட்டது உண்மை தான் என்றும், ஆனால் வாதி வழக்குச்சொத்தை வாங்கியதாக கூறப்படும் நாளிலிருந்து ஒரு நாள் கூட உடைமையாக இன்று வரை அனுபவிக்கவில்லை என்றும், மேலும் பொது அதிகார முகவர் பத்திரம் ரத்து செய்யப்பட்ட பிறகு டாக்டர்.சுனில் பி.சுரானா 20.09.2010 அன்று ஆவணஎண்.7393/2010, சார்பதிவாளர் அலுவலகம், செங்குன்றத்தில் ஒரு மோசடியான விற்பனைப்பத்திர ஆவணத்தை வாதிக்கு ஆதவாக செயல்படுத்தியுள்ளார் என்றும், அது சட்டத்திற்கு எதிரானது என்றும், எனவே விற்பனைப் பத்திரம் போலியானது என்றும், அனைத்து உண்மைகளையும் மறைத்து 30.12.2010 அன்று சட்டவிரோத விற்பனைப்பத்திரம் மூலம் பட்டா பெற்றுள்ளார் என்றும், அசல் பட்டா பிரதிவாதியின் தந்தை திரு.கணேசன் அவர்கள் பெயரில் அப்படியே உள்ளது என்றும், வாதியும் டாக்டர்.சுனில் பி.சுரானாவும் அரசாங்க அதிகாரிகளையும், 1 மற்றும் 2 பிரதிவாதிகளையும் ஏமாற்றியுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பத்தி எண்.7 மற்றும் 8-ல் கூறப்பட்டுள்ள சங்கதிகள் முற்றிலும் தவறானவை என்றும், மேலும் முதல் பிரதிவாதி தவறான நோக்கத்துடன்

வழக்கறிஞரின் அதிகாரத்தை ரத்து செய்ததாக பத்திஎண்.8-ல் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தவறானது என்றும், முதல் பிரதிவாதியின் கணவர் திரு.ஆறுமுகம் திரு.கௌரிநாதன் மூலமாக பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்த விவரத்தை 2010-ம் ஆண்டிலேயே தெரிவித்ததாகவும், அதன்பிறகு திரு.கௌரிநாதன் அவர்கள் பிரதிவாதிகளுடைய குடும்ப உறுப்பினர்களை டாக்டர் சுனில் பி.சுரானாவின் இடத்திற்கு 2013 மற்றும் 2014-ம் ஆண்டு அழைத்துச் சென்று காவல்துறை மற்றும் வருவாய்துறை அதிகாரிகளிடம் அளித்த புகார்களை திரும்பப்பெற பிரதிவாதிகளை வற்புறுத்தியதாகவும், மேலும் பத்தி எண்.9-ல் கூறப்பட்டுள்ள சங்கதிகளான முதல் பிரதிவாதி தனது செட்டில்மெண்ட் ஆவணத்தை இரண்டாம் பிரதிவாதிக்கு ஆதரவாக 10.11.2010 அன்று ஆவணஎண்.9526/2010, சார்பதிவாளர் அலுவலகம், செங்குன்றத்தில் ஏற்படுத்தியது உண்மை தான் என்றும், மேலும் சொத்து உடைமை தொடர்பான வழக்கு தவறானது என்றும், மேலும் முதல் பிரதிவாதிக்கு பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்ய உரிமை இல்லை என்ற குற்றம் சாட்டுவதற்கு வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பத்தி எண்.10-ல் கூறப்பட்டுள்ள சங்கதியான விசாரணை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், பொன்னேரியில் நிலுவையில் இருப்பதை மனுதாரர் ஒப்புக் கொள்வதாகவும், மேலும் விசாரணை மற்றும் சரிபார்ப்பிற்கு பிறகு வருவாய்துறை அதிகாரிகள் வாதியிடம் பிரதிவாதிகளுக்கு எதிராக நீதிமன்றத்தை அணுகுமாறு அறிவுறுத்தியதாக கூறுவது தவறானது என்றும், உண்மையில் வருவாய்த்துறை அதிகாரிகள் 26.07.2017 அன்று பிரதிவாதிகளுடைய அறிக்கை பதிவு செய்தனர் என்றும், அது வாதிக்கு தெரியும் என்றும், அதில் அவர்கள் சொத்து தற்போது இரண்டாம் பிரதிவாதி வசம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் டாக்டர்.சுனில் பி.சுரானா பணம் கடன் வழங்குபவர் என்றும், முதல் பிரதிவாதியின் கணவர் திரு.ஆறுமுகம் மற்றும் அவரது சகோதரர் திரு.குருநாதன் ஆகியோர் 1999-ம் ஆண்டு டிராக்டர் வாங்குவதற்காக திரு.கௌரிநாதன் மூலமாக டாக்டர்.சுனில் பி.சுரானாவை அணுகினர் என்றும், அந்த நேரத்தில் திரு.கௌரிநாதன் முதல் பிரதிவாதியையும் அவரது கணவரையும் திரு.குருநாதன் சார்பாக அவர்கள் முன் நிறுத்தி சார்பதிவாளர் அலுவலகம், செங்குன்றத்தில் பல்வேறு ஆவணங்களில் கையெழுத்து பெற்றதாகவும், திரு.குருநாதன் தனது கடனை திரு.சுனில் பி.சுரானாவிடம் செலுத்தினார் என்றும், அதன்பின்னர் 2010-ம் ஆண்டு திரு.கௌரிநாதன் முதல் பிரதிவாதியையும் அவரது கணவரையும் சென்னையில் உள்ள டாக்டர் சுனில் பி.சுரானாவின் வீட்டிற்கு அழைத்துச் சென்று வழக்குச் சொத்தை அவர்களுக்கு விற்று விடுமாறு வற்புறுத்தியதாகவும், அவர்கள் மறுத்ததால் சம்மதம் இல்லாவிட்டாலும் சொத்தை உரிமையாக்கலாம் என்று கூறியதாகவும், பின்னர் அவர்கள் இரண்டாம் பிரதிவாதிக்கு தகவல் தெரிவித்தனர் என்றும், மேலும் சந்தேகத்தின் பேரில் 20.08.2010 அன்று வில்லங்கச் சான்றிதழை பெற்று பார்த்த போது 15.10.1999 தேதியிட்ட பொது அதிகார பத்திரத்தை செயல்படுத்தியதை கண்டறிந்தனர் என்றும், 27.08.2010 அன்று முதல் பிரதிவாதி பொதுஅதிகார பத்திரத்தை ரத்து செய்த பிறகு டாக்டர் சுனில்.பி.சுரானா தனது முகவராக வாதிக்கு ஆதரவாக வழக்குச் சொத்து தொடர்பான விற்பனை பத்திரத்தை நிறைவேற்றியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பிரதிவாதிகள் திருவள்ளூர் காவல் கண்காணிப்பாளர் முன் ஒரு புகார் செய்ததாகவும், 29.10.2010 தேதியிட்ட விற்பனைப் பத்திரத்தை ரத்து செய்வது குறித்து சார் பதிவாளர் மற்றும் பதிவுத்துறை தலைமை ஆய்வாளர் அவர்களுக்கு

கடிதம் அனுப்பியதாகவும், மேலும் வட்டாட்சியர், பொன்னேரியில் வாதி பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய வேண்டும் என்று புகார் அளித்ததாகவும், மேலும் 2013-ம் ஆண்டு துணைக்காவல் கண்காணிப்பாளர், திருவள்ளூரில் இரண்டாவது பிரதிவாதியின் புகாரின் அடிப்படையில் விசாரணை நடந்ததாகவும், வாதியும், டாக்டர் சுனில்.பி.சுரானாவும் அதில் கலந்து கொண்டதாகவும், மேலும் அவர்கள் பொது அதிகாரம் மற்றும் விற்பனை பத்திரத்தை மோசடியாக நிறைவேற்றியதாக காவல்துறை முடிவு செய்த போது, இருவரும் உரிமையியல் நீதிமன்றத்தில் இது குறித்து தீர்த்து கொள்வதாக அறிக்கை அளித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் 2014-ம் ஆண்டு பதிவுத்துறை தலைமை ஆய்வாளர் 20.09.2010 தேதியிட்ட கிரையப்பத்திரம் குறித்து விசாரணை நடத்தக் கோரி மாவட்ட பதிவாளருக்கு தெரிவித்ததாகவும், ஆனால் அது குறித்து எந்த நடவடிக்கையும் இல்லை என்றும், மேலும் இரண்டாம் பிரதிவாதி 03.07.2018 மீண்டும் பதிவுத்துறை தலைமை ஆய்வாளர் அவர்களுக்கு இது குறித்து தெரிவித்ததாகவும், அவர் மாவட்ட பதிவாளருக்கு இரண்டாம் பிரதிவாதி தரப்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தெரிவிக்குமாறு உத்தரவிட்டதாகவும், அந்த நகல் இரண்டாம் பிரதிவாதி மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

வாதியின் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்யக்கோரி 2014-ம் ஆண்டு வருவாய்த்துறை அதிகாரிகள், பொன்னேரி, வாதி மற்றும் பிரதிவாதிகளை வரவழைத்து புகாரின் அடிப்படையில் விசாரணை நடத்தினார் என்றும், இதில் வாதி சுமார் மூன்று ஆண்டுகளாக வழக்கை இழுத்தடித்தார் என்றும், இறுதியாக பொன்னேரி தாசில்தார் விசாரணையில் வாதி சொத்துக்களை வைத்திருக்கவில்லை என்றும், மனுதாரரின் ஆவணம் பொய்யானது என்றும் பதிவு செய்ததாகவும்,

விசாரணையில் அறிக்கைகளின் நகல் இரு தரப்பினருக்கு வழங்கப்பட்டது என்றும், 26.072017 அன்று வருவாய்த்துறை அதிகாரிகள் பதிவு செய்த வாக்குமூலத்தில் அடுத்த கட்ட விசாரணையில் வாதியின் பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்ய செல்வது குறித்து தெரிய வந்ததாகவும், வருவாய்த்துறை அதிகாரிகளின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வாதி நீதிமன்றத்தை அணுகி இடைக்கால தடை உத்தரவு பெற்று வழக்கை இழுத்தடித்ததாகவும், தடை உத்தரவு பெற்ற பின், மனுவின் நகலை வாதி வட்டாட்சியர், பொன்னேரி, அவர்களுக்கு தெரிவித்ததாகவும், டாக்டர் திரு.சுனில் பி.சுரானா அவர்கள் செய்த மோசடிகள் அனைத்திற்கும் திரு.கௌரிநாதன் அவர்கள் ஒரு கருவியாக மட்டுமே இருந்துள்ளார் என்றும், எனவே டாக்டர்.சுனில் பி.சுரானா அவர்கள் இதில் ஒரு அவசியமான தரப்பினர் என்றும், மேலும் இந்த வழக்கை பதிவு செய்து நிலுவையில் இருக்கும்போது வாதி சமரசத்திற்காக பிரதிவாதிகளை அணுகியதாகவும், அது தோல்வியுறவே மீண்டும் ஒரு முறை பைனான்சியர் என்ற பெயரில் மிரட்டியதாகவும், மேலும் தன்னிடமிருந்து ஒரு பைசாவோ அல்லது நிலத்தையோ பெற முடியாது என்று கூறியதாகவும், பைனான்சியர் உண்மையான தரப்பினர் என்றும் வாதி பினாமி என்றும், பைனான்சியர் பெயரை விட்டுவிட்டு அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்காமல் வாதி அவரின் ஒரு கருவியாக செயல்பட்டதாகவும், மேலும் இரண்டாம் பிரதிவாதி இடைநிலை மனு எண்.701/2017-ல் தனது பதிலுரை தாக்கல் செய்ததாகவும், எழுத்துபூர்வ அறிக்கை ஒரு பகுதியாக கருதப்படப்பட வேண்டும் என்று குறிப்பிட்டதாகவும், அந்த மனுவில் முதன்மையான வழக்கு உள்ளது என்றும், வெற்றிட ஆவணத்தின் மீது வாதி உரிமை கோர முடியாது என்றும், ஆகவே வழக்கை தற்கால செலவுகளுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று

குறிப்பிட்டுள்ளார்.

**3. வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை அடிப்படையில் கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன.**

1. வாதி கோரியவாறு 27.08.2010 தேதியிட்ட ஆவணஎண்.1940/2010 பொது அதிகார ரத்து பத்திரம் செல்லத்தக்கதல்ல என்று அறிவிக்கக் கோரிய நிவாரணம் வழங்கத்தக்கதா இல்லையா?

2. வாதி கோரியவாறு 10.11.2010 தேதியிட்ட ஆவணஎண்.9526/2010 செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று அறிவிக்கக்கோரும் நிவாரணம் வாதிக்கு வழங்கத்தக்கதா இல்லையா?

3. வாதி கோரியவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை வாதிக்கு வழங்கக்கூடியதாக இல்லையா?

4. வேறு என்ன பரிகாரம்?

வாதி தரப்பில் வாதி திரு.தேவேந்திரன் வா.த.சா.1 ஆகவும், வாதி தரப்பில் வா.த.சா.ஆ.1 முதல் 9 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. எழுவினா 1 மற்றும் 2**

வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது தாவா சொத்து திரு.கணேசன் என்பவருக்கு சொந்தமானது என்றும், அவரது மனைவி மரகதம்மாள் 25 வருடங்களுக்கு முன்பு இறந்து விட்டார் என்றும், அவருடைய ஒரே மகள் பாப்பாத்தி அம்மாள் முதல் பிரதிவாதி என்றும், வழக்குச் சொத்தானது அதன் உரிமையாளர் திரு.கணேசன் பெயரில் பட்டா இருந்தது என்றும், அவருடைய

வாரிசுதாரர் முதல் பிரதிவாதி என்பதால் 30.10.1995 அன்று அவருடைய பெயருக்கு பட்டா மாற்றலாகியது என்றும், உயில் அடிப்படையில் முதல் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் முழு உரிமையும் வந்தது என்றும், அதன்பிறகு முதல் பிரதிவாதி 15.10.1999 அன்று டாக்டர்.சுனில் பி.சுரானா என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றும், அப்போது முதல் பிரதிவாதி அதிகார முகவரிடமிருந்து ரூ.74,800/- பெற்றுக் கொண்டார் என்றும், பொது அதிகார பத்திரம் சாட்சிகள் முன்னிலையில் எழுதிக் கொடுத்தார் என்றும், அதன் அடிப்படையில் தாவா சொத்தை ஆண்டு அனுபவித்து வந்தார் என்றும், மனுவில் 20.09.2010 அன்று பொதுஅதிகார முகவரிடமிருந்து வாதி கிரையம் பெற்று அன்று முதல் சுவாதீனத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறார் என்றும், அவருடைய பெயருக்கு பட்டா, சிட்டா, அடங்கல் மாற்றலாகி கிஸ்து செலுத்தி தொடர்ந்து அனுபவித்து வருகிறார் என்றும், முதல் பிரதிவாதி எழுதிக் கொடுத்த அதிகார பத்திரம் சோழவரம் பேருந்து நிலையத்தில் பயணம் செய்த போது தொலைந்து விட்டது என்றும், அது சம்மந்தமாக 03.09.2010அன்று சோழவரம் காவல்நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டு 17.09.2010 அன்று காவல்துறையினரிடம் ஆவணம் தொலைந்ததற்கான சான்று பெறப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் வாதி கிரையம் பெற்ற தாவா சொத்தை ஆண்டு அனுபவித்து வருகிறார் என்றும், இதற்கிடையில் இரண்டாம் பிரதிவாதி தாவா சொத்தின் உரிமையாளர் என்று பிரச்சனை ஏற்படுத்தினார் என்றும், அதன் அடிப்படையில் வில்லங்கம் பார்க்கும்போது முதல் பிரதிவாதி 27.08.2010 தேதியில் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்துவிட்டதாகவும், அதுகுறித்து எந்தவொரு முன்னறிவிப்போ அல்லது ரத்து செய்யப்பட்ட அறிவிப்போ எதுவும்

கொடுக்கவில்லை என்றும், அதன் அடிப்படையில் பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்டது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அதன் அடிப்படையில் முதல் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதிக்கு ஆதரவாக செயல்படுத்திய 10.11.2010 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், இரண்டாம் பிரதிவாதி முன்னெச்சரிக்கையாக செட்டில்மெண்ட் ஆவணத்தின் பட்டா, சிட்டா, அடங்கல் மாற்றம் செய்ய முயற்சி செய்த போது வருவாய்துறையினர் விசாரணைக்கு இரண்டாம் பிரதிவாதி ஆஜராகவில்லை என்றும், பின்னர் வருவாய்துறையினர் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறி விட்டார்கள் என்றும், எந்தவொரு அறிவிப்பும் இன்றி பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்தது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், வாதி நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேயே தீர விசாரித்து தாவா சொத்தை கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றும், ஆதலால் பொது அதிகார ரத்து பத்திரம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று அறிவித்தும், மேலும் மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று அறிவிக்க வேண்டும் என்று வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

**5.** பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது தாவா சொத்து திரு.கணேசன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், அவருடைய ஒரே வாரிசாக முதல் பிரதிவாதி தாவா சொத்து குறித்து டாக்டர்.சுனில் பி.சுரானா அவர்களுக்கு 15.10.1999 ஆவணஎண்.869/1999 -ன் அடிப்படையில் பொது அதிகார பத்திரம் ஏற்படுத்தினார் என்றும், அதன்பிறகு 27.08.2010 அன்று பொது அதிகாரப் பத்திரத்தை ரத்து செய்து விட்டார் என்ற வாதி தரப்பு குற்றச்சாட்டு பொய்யானது என்றும், மேலும் அவரது முகவரிடம் இருந்து எந்தவொரு பணத்தையும் முதல்

பிரதிவாதி பெறவில்லை என்றும், குருநாதன் மற்றும் கௌரிநாதன் ஆகியோர் முகவருடன் சேர்ந்து கொண்டு பொய்யான ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளனர் என்றும், மேலும் பட்டா, சிட்டா, அடங்கல் ஆகியவை வாதி பெயரில் மாற்றப்பட்டது உண்மை தான் என்றும், வாதி வழக்குச் சொத்தின் வாதுரையில் குறிப்பிடப்பட்டிருக்கும் நாளிலிருந்து சுவாதீனத்தை அனுபவிக்கவில்லை என்றும், பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்ட பிறகு 20.09.2010-ல் மோசடியாக கிரைய ஆவணம் வாதி பெயருக்கு ஏற்படுத்தியது சட்டத்திற்கு எதிரானது என்றும், அந்த கிரைய ஆவணம் போலியானது என்றும், உண்மையை மறைத்து கிரைய ஆவணம் ஏற்படுத்தி பட்டா, சிட்டா, அடங்கல் மாற்றப்பட்டுள்ளது என்றும், அதன்பிறகு குருநாதன் அவர்கள் பிரதிவாதிகள் குடும்ப உறுப்பினர்களிடம் சென்னையில் டாக்டர்.சுனில் பி.சுரானா இடத்திற்கு 2013 மற்றும் 2014 அழைத்துச்சென்று வருவாய்த்துறை அதிகாரிகளிடம் அளித்த புகாரை திரும்பப் பெற வேண்டும் என்று பிரதிவாதிகளை வற்புறுத்தினர் என்றும், முதல் பிரதிவாதிக்கு பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்ய உரிமை இல்லை என்ற குற்றம் சாட்டுவதற்கு வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், மேலும் 26.07.2017 அன்று வருவாய்த்துறை அதிகாரிகள் பிரதிவாதிகளுடைய அறிக்கை பதிவு செய்தனர் என்ற விவரம் வாதிக்கு தெரியும் என்றும், அதில் அவர்கள் சொத்து தற்போது இரண்டாம் பிரதிவாதி வசம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் தாவா சொத்தை பிரதிவாதிகளை விற்கச் சொல்லி அதிகார முகவர் வற்புறுத்தினார் என்றும், சம்மதம் இல்லாவிட்டாலும் சொத்தை விற்பனை செய்வோம் என்றும், மேலும் போலியான ஆவணங்கள் அடிப்படையில் கிரையம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும், அதில் முக்கியமான சார்பதிவாளர் ஆகியோர் இந்த குற்றத்தை

*ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும், இது சம்மந்தமாக பதிவுத்துறையில் புகார் கொடுக்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், போலியான ஆவணங்கள் தயார் செய்து தாவா சொத்தை அபகரிக்க வேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று வாதிட்டு கீழ்க்கண்ட தீர்ப்புகளை சுட்டிக்காட்டி வாதிட்டார்.*

1. ***SCC 2008 (6) CTC 237, R.V.Raveendran and P.Sathasivam.JJ, C.A.No.6191 of 2001, dated 25.03.2008, Anathula Sudhakar Vs P.Buchi Reddy (Dead) & others )***
2. ***2013 (4) CTC 145, Madurai Bench, S.Palanivelu.J, CRP.(PD) (MD). No.394 of 2012 & M.P.No.1 of 2012, dated 03.06.2013, D.Srivasan Vs D.Chairman and others.,***
3. ***SCC (CA) No,5755-5756 of 2011, B.R.Gavai, B.V.Nagarathna, dated 27.09.2022, Moreshar Yadaorao Mahajan & Vyankatesh Sitaram Bhedi (D) their legal heirs and others.***

*மேலும் எழுத்துபூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

***6.*** *மேற்சொன்ன காரண காரியங்களை ஒருங்கே ஆய்வு செய்து பார்க்கும்போது பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்டது செல்லத்தக்கதா இல்லையா என்பது குறித்து தீர்வு காணப்பட வேண்டும்.*

*மேலும் வா.த.சா.1 முதல் விசாரணையில் வா.த.சா.ஆ.9 குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணம் பணப்பற்று ரசீது ஆகும். அது ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. அந்த ரசீதின் தன்மை உண்மையா இல்லையா அது ஏற்றுக் கொள்ளக்கூடியதா என்பதற்கு பிரதிவாதி தரப்பில் சுய சாட்சியமோ அல்லது அந்த ஆவணத்தை தடய அறிவியல் துறைக்கு அனுப்பி அதன் உண்மை தன்மை அறியும் பொருட்டு நடவடிக்கை மேற்கொண்டதாக தெரியவில்லை. அதனால் அந்த ஆவணம் ஏற்றுக்*

கொள்ளக்கூடியது தான் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

வா.த.சா.1 குறுக்கு விசாரணையில்

" வா.த.சா.ஆ.5-ஐ காண்பித்து என்ன பத்திரம் என்று கேட்டால் பொது அதிகார ரத்து பத்திரம் ஆகும். அதை யார் ரத்து செய்தது என்றால் பாப்பாத்தியம்மாள். எந்த தேதியில் ரத்து செய்துள்ளார்கள் என்றால் 27.08.2010. வா.த.சா.ஆ.5-ல் எந்த பத்திரத்தை ரத்து செய்துள்ளார் என்றால் சுனில் சுரானவிற்கு கொடுத்த பத்திரத்தை ரத்து செய்துள்ளார். வா.த.சா.ஆ.1-ஐ ரத்து செய்து பாப்பாத்தியம்மாள் பத்திரம் ஏற்படுத்தினார் என்றால் சரி தான். வா.த.சா.ஆ.1 மற்றும் 5 ஆகியவை தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்டது என்றால் சரி தான்". 27.08.2010 அன்று பொது அதிகார பத்திரம் ரத்தானது என்று சொல்லியுள்ளேன் என்றால் முதலில் தெரியாது. பிறகு தான் தெரியும். நான் கிரையம் வாங்கிய தேதி 20.09.2010 என்றால் சரி தான். ஆகஸ்டு மாதம் பொது அதிகார பத்திரம் ரத்தானது என்றால், அதை எனக்கு தெரிவிக்கவில்லை. எனக்கு தெரியாது. நான் வா.த.சா.ஆ.1 மற்றும் 5-ல் தரப்பினராக இல்லாதபோது எதற்காக என்னிடம் தெரிவிக்கவில்லை என்றால் சுரானாவிடம் தெரிவிக்கவில்லை என்று சொன்னார். தரப்பினர்கள் இருவரும் சேர்ந்தே ரத்து செய்திருந்தால் என்றால் சுரானவிடம் கேட்டதற்கு எழுத்துமூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ எனக்கு தெரிவிக்கவில்லை என்று சொன்னார். பொது அதிகார பத்திரம் தரப்பினர்கள் இருவரும் சேர்ந்து தான் (unanimously) ரத்து செய்தார்கள் என்று பிராதிலும், இடைக்கால மனுவின் பிரமாண பத்திரத்திலும் கூறியிருக்கிறேன் என்றால் தெரியவில்லை. சேட்டை தான் கேட்க வேண்டும். பொது அதிகாரம் சுரானாவிற்கு இல்லாத போது நான் எப்படி

*20.09.2010-ல் கிரையம் பெற்றேன் என்றால் ரத்து செய்த விவரம் எனக்கு தெரியாது".*

*இந்த குறுக்கு விசாரணையில் பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்ட விவரத்தை வாதிக்கு பிரதிவாதிகள் எழுத்துபூர்வமாகவோ அல்லது வாய் மொழியாகவே தெரிவிக்கவில்லை என்பதை குறிப்பிட்டுள்ளார். மேலும் கிரையம் ஏற்படுத்தப்படும் போது பொது அதிகார பத்திரம் ரத்தானது தெரியாது என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. பொது அதிகாரம் ரத்து செய்யப்பட்டது உண்மை தான் என்பதை வழக்கு ஆவணங்கள் மற்றும் வழக்குக் கோப்புகளை ஆய்வு செய்து பார்க்கும்போது தெரிய வருகிறது. ஒரு பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்ட பிறகு அது சம்பந்தமாக அந்த சொத்தின் முகவர் அறிவிற்கு எட்டும் வகையில் தெரிவித்து இருக்க வேண்டும். இந்த வழக்கில் பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்டது குறித்து அதிகார முகவருக்கு தெரிவித்ததற்கு எந்தவொரு சாட்சியமோ சான்று ஆவணமோ பிரதிவாதி தரப்பில் முன் நிறுத்தவில்லை என்று நீதிமன்றத்திற்கு தோன்றுகிறது.*

***7.*** *பிரதிவாதிகள் தரப்பில் பொது அதிகார முகவர் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட பிறகு அவருடைய பெயருக்கு பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் மாற்றம் செய்யப்பட்டது உண்மை தான் என்று கூறியுள்ளார். மேலும் டாக்டர் சுனில் பி.சுரானா ஒரு பைனான்சியர் என்பதை ஒப்புக் கொண்டுள்ளார்கள். வாதியும், சுனில் பி.சுரானாவும் மற்றும் அரசாங்க அதிகாரிகளும் சேர்ந்து 1 மற்றும் 2 பிரதிவாதிகளை ஏமாற்றியுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டிற்கு எந்தவொரு அடிப்படை சாட்சியம் மற்றும் சான்றாவணம் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்று*

தோன்றுகிறது. மேலும் முகவர் சார்பாக கௌரிநாதன் பிரதிவாதிகளை மிரட்டியதாக கூறப்படும் குற்றச்சாட்டிற்கு எந்தவொரு அடிப்படை ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றே தோன்றுகிறது. பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்பட்ட பிறகு வாதிக்கு போலியான ஆவணங்களை தயார் செய்து கிரையம் ஏற்படுத்தி கொடுத்தது குறித்து ஏன் காவல்நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கவில்லை என்று தெரிவிக்கவில்லை. மேலும் இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை என்பது தெரிய வருகிறது. பிரதிவாதிகள் தரப்பில் எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்பதை அறிய முடிகிறது. மேலும் பிரதிவாதிகள் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்த பின் விற்பனை செய்தது குறித்து திருவள்ளூர் காவல் நிலையத்தில் புகார் செய்ததாகவும், மேலும் 29.10.2010 அன்று விற்பனை பத்திரத்தை ரத்து செய்வது குறித்து சார்பதிவாளர் மற்றும் பதிவுத்துறை தலைமை ஆய்வாளருக்கு புகார் அளித்ததாகவும், மேலும் 2013-ல் திருவள்ளூர் துணைக் காவல் கண்காணிப்பாளர் பிரதிவாதிகள் புகாரின் பெயரில் விசாரணை நடத்தியதாகவும், பிரதிவாதிகள் தரப்பில் எதிருரையில் குறிப்பிடும் சங்கதிகளை முன் நிறுத்தி எந்தவொரு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலமாகவோ நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**8.** பிரதிவாதிகள் தரப்பில் எதிருரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் எந்தவொரு அடிப்படை சாட்சி மற்றும் சான்றாவணங்களோ முன்நிறுத்தி அவர்கள் தரப்பில் வழக்கை நிரூபிக்கவில்லை என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. பொதுவாக ஒரு பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்படும்போது பொது அதிகார பத்திரம் ரத்து செய்யப்படுவதற்கான காரணம் குறித்து அதிகார முகவருக்கு

அறிவிப்பு வழங்கப்பட வேண்டும் இல்லையென்றால் அவரது அறிவிற்கு எட்டும் வகையில் இந்த சங்கதிகளை தெரிவித்து இருக்க வேண்டும் அவருக்கு தெரிவிக்கப்பட்டது என்பதற்கான எந்தவொரு சாட்சி மற்றும் சான்றாவணமோ பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை என்று தெளிவாக தெரிய வருகிறது. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் பொது அதிகாரப் பத்திரம் செல்லத்தக்கது என்று இந்த நீதிமன்றம் கருதி பொது அதிகாரம் ரத்து செய்யப்பட்ட பிறகு கிரைய ஆவணம் ஏற்படும் போது ரத்து செய்யப்பட்ட விவரம் வாதியின் முகவருக்கு தெரியவில்லை என்பதை வாதி தரப்பில் கூறப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம் தாக்கல் செய்யவில்லை. மேலும் பொது அதிகாரம் ரத்து செய்யப்பட்ட பிறகு இரண்டாம் பிரதிவாதி முதல் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளார். அதற்கு முன்பே தாவா சொத்து கிரையம் ஏற்பட்டுள்ளதாலும் ரத்து செய்யப்பட்ட ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில் வாதிக்கு ஏற்படுத்திய ஆவணம் செல்லத்தக்கத்து என்று நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

மேற்சொன்ன காரண காரியங்களை ஒருங்கே ஆய்வு செய்து பார்க்கும்போது எழுவினா 1 மற்றும் 2 வாதிக்கு ஆதரவாக விடை காணப்படுகிறது.

## 9. எழுவினா 3

இந்த வழக்கில் எழுவினா 1 மற்றும் 2 வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கில் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க வேண்டும் என்று வாதி கோரியுள்ளார். தாவா சொத்து வாதியின் அனுபவித்தில் இருப்பதாகவே இந்த நீதிமன்றம் கருதுகிறது. எனென்றால் பொது

அதிகார முகவர் பத்திரம் ரத்து செய்யப்பட்டது செல்லத்தக்கதல்ல என்று இந்த நீதிமன்றம் தெளிவாக பரிசீலனை செய்து தீர்வு காணப்பட்டுள்ளது. ஆதலால் எழுவினா 3 வாதிக்கு ஆதரவாக விடை காணப்படுகிறது. இதர பரிகாரங்கள் எதுவும் வழங்க வேண்டியதில்லை என்று தீர்மானிக்கிறது.

முடிவில்

அசல் வழக்கு அனுமதிக்கப்படுகிறது.

i) பிரதிவாதியோ மற்றும் அவரது ஆட்களோ, அவரது முகவர்களோ அல்லது அவரை சார்ந்தவர்களோ வழக்குச்சொத்தில் வாதியின் அமைதியான உடைமையில் எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என்று உத்தரவிடப்படுகிறது.

ii) 27.08.2010 தேதியிட்ட சார்பதிவாளர் அலுவலகம், செங்குன்றத்தில் ஆவணஎண்.1940/2010-ல் பதிவு செய்யப்பட்ட பொதுஅதிகார முகவர் ரத்து பத்திரம் செல்லாது என்று அறிவிக்கப்படுகிறது.

iii) 10.11.2010 தேதியிட்ட சார்பதிவாளர் அலுவலகம், செங்குன்றத்தில் ஆவணம் எண்.9526/2010-ல் 1-ம் பிரதிவாதியால் 2-ம் பிரதிவாதி பெயரில் பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என்று உத்தரவிடப்படுகிறது.

v) செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் பதிவிடப்பட்டு செய்யப்பட்டு என்னால் சரி பார்க்கப்பட்டு,

பின்னர் இன்று 2022-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(கையொப்பம்/- த.பாஸ்கர்)
கூடுதல் சார்பு நீதிபதி,
பொன்னேரி.

<u>வாதி தரப்பு சாட்சி</u> :
வா.த.சா.1. திரு.தேவேந்திரன்

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :

வா.த.சா.ஆ.1. 15.10.1999 தேதியிட்ட பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் , ஆவண எண்.869/1999.

வா.த.சா.ஆ.2. 20.09.2010 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல், ஆவணஎண்.7393/2010.

வா.த.சா.ஆ.3. பட்டா

வா.த.சா.ஆ.4. கிஸ்து ரசீதுகள் (2 எண்ணம்).

வா.த.சா.ஆ.5. 27.08.2010 தேதியிட்ட பொது அதிகார ரத்துப்பத்திரத்தின் சான்றிட்ட நகல், ஆவணஎண்.1940/2010.

வா.த.சா.ஆ.6. 10.11.2010 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல், ஆவணஎண்.9526/2010.

வா.த.சா.ஆ.7. அழைப்பாணையின் நகல்

வா.த.சா.ஆ.8. இறுதி அழைப்பாணையின் நகல்

வா.த.சா.ஆ.9. 25.10.1999 தேதியிட்ட பணப்பற்று ரசீது நகல்.

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : இல்லை

(கையொப்பம்/- த.பாஸ்கர்)
கூடுதல் சார்பு நீதிபதி,
பொன்னேரி.

// உண்மை நகல் //